# C.S.I TAMIL CHURCH - OMAN

# “பாலைவன மன்னா”

**விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம். எபிரெயர் 12:1**




மன்னா – 9 மார்ச் 2020 பிரதி – 12



# ஆயர் மடல்



மாற்றம் நிறைந்த உலகில் மாறாதவராய் நம்மை வழிநடத்தும் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்.

மார்ச் மாத பாலைவன மன்னா இதழ் வழியாக உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சி. பொறுமையான பொறுப்புணர்வு புதுமையான உயர்வுக்கு நம்மை வழிநடத்தும் என்னும் உயரிய சிந்தனை நமக்கு வேண்டும்.

**பொறுமை :-** ஆண்டவராகிய கர்த்தர் நமக்கு பல்வேறு வடிவத்தில் பொறுப்புக்களைத் தருகிறார். அதில் பொறுமை அவசியமாகிறது. ஒரு பெண் குழந்தைபேற்றிற்காக 10 மாதங்கள் பொறுமையுடன் காத்திருக்கிறாள். பின் குழந்தையைப் பெற்று தாய் என்னும் உயர்வைப் பெறுகிறாள். விவசாயி அறுப்புக்காலத்திற்காக பொறுமையுடன் காத்திருக்கிறான். அறுத்த அரிக்கட்டுகளோடு கம்பீரமாய் நடக்கிறான். ‘பொறுத்தவன் பூமி ஆள்வான்’ என்பார்கள்.

**வேகம் :-** நம்முடைய வேகம் நம்மையே சேதப்படுத்திவிடும் என்பதற்காக சாலை ஓரங்களில் நாம் செல்லவேண்டிய வேகத்தை குறித்து வைத்திருப்பார்கள். அதுபோல் வாழ்வில் நாம் செல்லவேண்டிய வேகம் வேதத்தில் குறித்து வைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு நாளும் வேதத்தை திறந்து வாழ்வின் வேகத்தை கட்டுப்படுத்திக் கொள்ளுவதும், மட்டுப்படுத்திக்கொள்வதும் நமது கடமை என உணர்வோம்.

இப்புதிய மாதத்திலும் பொறுமையோடு வாழ்வைத் தொடர்ந்து பரமன் நமக்காக வைத்திருக்கும் பொக்கிஷங்களைப் பற்றிக்கொள்ள பாதம் பணிவோம். உயர்வு பெறுவோம்.


இறை ஆசி உங்களை நிரப்புவதாக. ஆமென்!

**அன்புடன் போதகர்,**

**Rev. Dr. N. ஜெசின்**

## ஆயர் அருளுரை

# பொறுமையும் உயர்வும்




இறை இயேசுவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள். பொறுமையும், உயர்வும் என்னும் தலைப்பில் நாம் இந்த மாதம் தியானிக்கின்றோம்.

ஒரு தாயார் தனது மகனை ஒரு சிறந்த பள்ளியில் 11-ம் வகுப்பு சேர்க்க சென்றபோது, கிறிஸ்தவர் என்ற வார்த்தைக்கு பதிலாக வேறு மதத்தை குறிப்பிட்டால் உங்கள் மகனுக்கு சீட் கிடைக்கும் என்று ஒருவர் கூறினார். ஆண்டவரே உம்மை மறுதலிக்காதபடி என்னை காத்துக்கொள்ளும் என ஜெபித்துவிட்டு பொறுமையோடு வேறு பள்ளியில் சேர்த்துவிட்டார் அந்த தாயார். ஒரு மாதம் கழித்து மீண்டுமாக முதலில் கேட்ட பள்ளியிலிருந்து ஒரு அழைப்பு வந்தது. நீங்கள் கேட்ட குரூப்பில் ஒரு இடமுள்ளது. டொனேஷன் இன்றி மகனைச் சேருங்கள் என்று. அன்றே போய் அந்த பள்ளியில் சேர்த்தனர். கர்த்தருக்கு ஸ்தோத்திரம். தேவன் எவ்வளவு உண்மையுள்ளவர். ஆகவே அவர் நம்மிடமும் அதே உண்மையை எதிர்பார்க்கிறார்.

தாவீது தேவனிடம் இவ்வாறு முறையிடுகிறார். ‘இரட்சியும் கர்த்தாவே, பக்தியுள்ளவன் அற்றுப்போகிறான்’ (சங்கீதம் 12:1). மீகா தீர்க்கதரிசியும் இவ்வாறே புலம்புகிறார் ‘தேசத்தில் பக்தியுள்ளவன் அற்றுப்போனான்’. மனுஷரில் செம்மையானவன் இல்லை (மீகா 7:2). ஆம் நமது பக்தியும், பொறுமையும், வைராக்கியமும் வெயிலைக் கண்ட பனியைப்போலத்தான் அநேக நேரங்களில் இருக்கிறது. அரசின் சலுகைகளை பார்த்தால் பக்திவைராக்கியத்தை அடகு வைத்துவிடுகிறோம். பொறுமையை இழந்துவிடுகிறோம். ஆனால் பொறுமையோடு ஆண்டவரை நோக்கினால் ஆண்டவர் நமக்கு உயர்வு தருவார்.

### 1. சிறந்தது பொறுமை :-

“கர்த்தருக்குள் பொறுமையுடன் காத்திருந்தேன்; அவர் என்னிடமாய் சாய்ந்து என் கூப்பிடுதலைக் கேட்டார்” (சங்கீதம் 40:1) என தாவீது ராஜா, பொறுமை கர்த்தரை நம் பக்கமாய் சாயப்பண்ணும் என்றும் நமது கூப்பிடுதலை கேட்கப்பண்ணும் என பொறுமையின் சிறப்பைக் கூறுகிறார். “பெருமையுள்ளவனைப் பார்க்கிலும் பொறுமையுள்ளவன் உத்தமன்” (பிரசங்கி 7:8) என பொறுமையின் மேன்மை குறித்து சாலமோன் ஞானி குறிப்பிடுகிறார்.

பொறுமை இழந்து சமூகத்தில் விபத்துக்கள், குடும்பத்தில் பிரிவினைகள், திருச்சபையில் சலசலப்புகள், ஏன் நம்முடைய வாழ்விலே சமாதானமின்மை-

-கள் ஏற்பட நாமே காரணமாகின்றோம். பொறுமையின் சிறப்பைப் புரிந்து செயல்பட ஆண்டவர் நம்மை அழைக்கிறோம்.

## 2. சிந்தனையில் பொறுமை :-

பொறுமையின்மையின் துவக்கம் சிந்தனையிலிருந்துதான் துவங்குகிறது. எனவேதான் ரோமர் 15:6-ல் ''பொறுமையையும் ஆறுதலையும் அளிக்கும் தேவன், கிறிஸ்து இயேசுவின் மாதிரியின்படியே நீங்கள் ஏக சிந்தையுள்ளவர்களாய் இருக்கும்படி'' எனத் தொடருகிறார். பொறுமை கிறிஸ்துவின் மாதிரி. அந்த மாதிரி நமது வாழ்விலும் தொடர திருமறை நமக்கு ஆலோசனை கூறுகிறது.

இயேசு நாதர் கூறிய உவமைகளில் விதைப்பவன் உவமை பல நிலைகளில் கருத்துக்களை உலகிற்கு கூறி நிற்கிறது. லூக்கா 8:15-ல் ''நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவர்கள் வசனத்தைக் கேட்டு அதை உண்மையும் நன்மையுமான இருதயத்திலே காத்துப் பொறுமையுடன் பலன் கொடுக்கிறவர்களாயிருக்கிறார்கள். சிந்தையிலும், இருதயத்திலும் திருவசனத்தையும் இறைத்திட்டத்தையும் புரிந்துகொண்டவர்கள் அதைக் காத்துக்கொண்டு பொறுமையுடன் பலன் கொடுக்கிறவர்களாய் மாறுகிறார்கள் என்பது உண்மை.

ஆவியின் கனிகள் ஒன்பதைக் குறித்து கூறும்போது நான்காவது கனியாக நீடிய பொறுமையாகிய கனி குறிப்பிடப்படுகிறது. இது நம்மில் வேண்டும் என்பது கனிதரும் ஆண்டவரின் எதிர்பார்ப்பு.

## 3. சிலுவையில் பொறுமை :-

இயேசு கிறிஸ்துவின் பொறுமைக் குறித்து பவுல் அப்போஸ்தலன் பிலிப்பியர் திருச்சபைக்கு கூறும்போது ''அவர் மனுஷருபமாய் காணப்பட்டு மரணபரியந்தம் அதாவது சிலுவையின் மரணபரியந்தம் கீழ்ப்படிந்தவராகி தம்மைத்தாமே தாழ்த்தினார்''. சிலுவை மரணம் வரைக்கும் பொறுமையாக தன்னை மனுமக்களின் வாழ்வுக்காய் பொறுமையுடன் அர்ப்பணித்தார் எனப் புரிந்துகொள்ளலாம். எனவே அவர் உயர்த்தப்பட்டார்.

பிலிப்பியர் 2:9,10 ''தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில், வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால்கள் யாவும் முடங்கும்படிக்கும்'' என இயேசு கிறிஸ்து சிலுவையின் பொறுமையில் பெற்றுக்கொண்ட உயர்வு சொல்லப்படுகிறது.

எனவேத்தான் ''விசுவாசத்தை துவக்குகிறவரும், முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்திலே பொறுமையோடே ஓடக்கடவோம்'' (எபி. 12:1(ஆ)) என பொறுமையின் ஓட்டத்திற்கு அழைக்கிறார்.

இறை இயேசுவை நோக்கி நாம் பொறுமையோடு ஓடும் இந்த ஓட்டம் சமுதாயத்தில், குடும்பத்தில், தனிப்பட்ட வாழ்வில், சமாதானத்தையும், மேன்மையையும், உயர்வையும் பெற்றுத்தருவதோடு நமக்காக காத்திருக்கும் நித்திய ஜீவக்கிரீடத்தையும் பெறுவதற்கு வழிநடத்தும். ஆண்டவர்தாமே உங்களை ஆசீர்வதித்து பொறுமையினால் வரும் உயர்வுக்கு நேராய் வழிநடத்துவாராக. ஆமென்!

**அன்புடன் போதகர்,**

**Rev. Dr. N. ஜெசின்**

## மகளிர் பகுதி

### பொறுமை கற்றுத்தரும் பாடம்

அழிந்துபோகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும். அதைப் பார்க்கிலும் அதிக விலையேறப்பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு இயேசு கிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும், கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும் (1பேதுரு 1:6-7).



ஒரு சிறுவன் தன் தோட்டத்தில் பட்டுபூச்சி புழுவை வளர்த்து வந்தான். அது தன்னை சுற்றிலும் பட்டு நூலால் கடினமான கூட்டைக் கட்டி உள்ளே இருந்தது. சில நாட்களுக்குப்பின் அது பட்டுபூச்சியாக மாறி வெளியே வர முயற்சி எடுத்தது. கூட்டிலிருந்து வெளிவருவது அவ்வளவு எளிதாக இல்லை. பல மணி நேரங்கள் பொறுமையோடு போராடி தான் வெளியே வரவேண்டும். ஆனால் அந்த சிறுவனுக்கோ பொறுமையில்லை. பட்டாம்பூச்சி படும் கஷ்டத்தையும் அவனால் தாங்க முடியவில்லை. ஆகவே ஒரு கூரிய பிளேடினால் மெதுவாக கூட்டை வெட்டி, பட்டு பூச்சியை சுலபமாக வெளியே எடுத்துவிட்டான். ஆனால் அந்த பட்டு பூச்சியினால் பறக்க முடியவில்லை. அதனுடைய சரீரம் பெரிதாக இருந்தபடியால் கீழே விழுந்துவிட்டது. முடிவில் அதை எறும்புகள் இழுத்துச் சென்றன.

அச்சிறுவனின் தகப்பன் சொன்னார்; மகனே அந்த பூச்சி கூட்டிலிருந்து வெளிவர பொறுமையோடு எடுக்கும் ஒவ்வொரு முயற்சியும், அதன் தசை நார்களையும், நரம்புகளையும் பெலப்படுத்தும். பல மணி நேரங்கள் அது வெளிவர பாடுபடுவதால் அதன் உடல் வற்றி எடை குறைந்து பறந்துசெல்ல வசதியாக இருக்கும். அது சகல முயற்சியும் செய்து தானாகவே வெளியே வந்திருந்தால் பரிபூரண வளர்ச்சியடைந்திருக்குமே! நீயோ அதன் வாழ்க்கையையே கெடுத்து விட்டாயே என்றார்.

இதுபோலத்தான், ஒரு நோயாளியின் சரீரத்தில் எந்த ஒரு வருத்தத்தையும் உருவாக்கக்கூடாது என ஒரு மருத்துவர் நினைத்தால் அந்த நோயாளி ஒருபோதும் சுகமடையமுடியாது. ஊசிகளையும், மருந்துகளையும் எடுத்துக்கொள்வதும், உரிய அறுவை சிகிச்சைகளை செய்வதும் நோயாளியை வருத்தமடையவே செய்யும். இருப்பினும் சுகமடைய வேண்டுமானால் அவற்றை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். அதுபோல நாம் என் வாழ்வில் ஒரு சிறு கஷ்டமும் வரக்கூடாது என்று எண்ணினால், நாம் ஒருபோதும் ஆவிக்குரிய வாழ்வில் பூரணமடையவே முடியாது. தேவனுடைய திட்டமும் நம் வாழ்வில் நிறைவேறவே முடியாது. பிறருக்கு பயனுள்ள ஒரு வாழ்க்கையும் நாம் வாழமுடியாது. ஆகவே நாம் பாடுகளை பொறுமையாய் சகித்தும், துன்பத்தில் துவண்டுவிடாமலும் பொறுமையாய் தேவனிடமிருந்து ஆவிக்குரிய பாடங்களை கற்றுக்கொள்ள பிரயாசப்படவேண்டும்.

வேதத்திலே, சாலமோன் ராஜா சகல சம்பூரணத்திலும் திளைத்து வாழ்ந்தார். எந்த பாடுகளுமற்ற பஞ்சு மெத்தை வாழ்வே வாழ்ந்தார். ஆனால் இன்று நாம் பின்பற்றக்கூடிய எந்த குணநலன்களும் அவரிடம் காணப்படவில்லை. ஆனால் தாவீதின் வாழ்விலே தடுக்கி விழுந்தால் துன்பம், எப்போதும் தன்னை விரட்டும் ஒரு கும்பல், அந்த துன்ப பெருக்கிலே தேவனை உறுதியாய் சார்ந்து கொண்டார். இயேசுவை ‘‘தாவீதின் குமாரன்’’ என்று அழைக்கும் பாக்கியத்தைப் பெற்றார்.

பிரியமானவர்களே! தேவனே பாடுகளையும், துன்பங்களையும் தாரும் என நாம் ஜெபிக்க வேண்டியதில்லை. ஆனால் தேவன் பாடுகளின் வழியாய் நம்மை நடத்தும்போது பொறுமையாய் கற்றுக்கொள்வோம். அச்சூழ்நிலைகளே நம்மில் பொறுமை, சாந்தம், நற்குணத்தை உருவாக்கும். கிறிஸ்துவுக்குள் நம்மை பூரணப்பட்டவர்களாக நிறுத்தும். இயேசு கிறிஸ்து பாடுகளே இல்லாத ஒரு வாழ்க்கையை நமக்கு வாக்களிக்கவில்லை. அவர் சொன்னார் ‘‘உலகத்திலே உங்களுக்கு உபத்திரவம் உண்டு; ஆனாலும் திடன்கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன்’’ என்றார் (யோவான் 16:33 பின்பாகம்). அவர் உலகத்தை ஜெயித்தபடியால், அவருடைய பிள்ளைகளாகிய நாமும் உலகத்தை ஜெயிக்கிறவர்களாக, உபத்திரவத்தின் ஊடே வெற்றிக்கொள்கிறவர்களாக மாற முடியும். உலகத்தின் மக்கள் துன்பம் வரும் நேரத்தில் சோர்ந்து போவார்கள். ஆனால் நாமோ துன்பங்களையே ஏணிப்படிகளாக வைத்து, ஜெயத்தின்மேல் ஜெயம் பெற்று முன்னேறுவோம். ஏனெனில் நமக்கு முன்பாக நம் இயேசு அந்த பாதையில் நடந்து சென்று நமக்கு வழியை காட்டிவிட்டபடியால், நாம் தொடர்ந்து வெற்றிநடை போடுவோம். ஆமென் அல்லேலூயா!

**அன்புடன் பெண்கள் சங்க தலைவி,**

**திருமதி D. ஷர்மிளா ஜெசின்**

## சிறுவர் பகுதி

# அழியாத ராஜ்ஜியம்

“நகைப்பிலும் மனதுக்குத் துக்கமுண்டு; அந்த மகிழ்ச்சியின் முடிவு சஞ்சலம்’’ (நீதி. 14:13).

தாவீது ராஜாவைப்பற்றியும், சாலமோன் ராஜாவைப்பற்றியும் அநேக சுவாரஸ்யமான கதைகள் சொல்லப்படுவதுண்டு. ஒரு நாள் தாவீது ராஜா ஒரு கனவு கண்டாராம். அதில் ஒரு மோதிரத்தைக் கண்டார். அதை அணிந்தவுடன் அது துக்கமுள்ள மனுஷனை மகிழ்ச்சியுள்ளவனாகவும், மகிழ்ச்சியுள்ள மனிதனை துக்கமுள்ளவனாகவும் மாற்றிற்று.




அடுத்தநாள் தூங்கி எழுந்தவுடன், அரண்மனையின் நகை செய்பவரை அழைத்து, அதே மாதிரி ஒரு மோதிரத்தை செய்யச் சொல்லிக் கட்டளையிட்டார். தன்னுடைய வாழ்க்கையின் நெருக்கமான நேரங்களில் அதை அணிந்து, சமாதானம் அடையப் போவதாகக் கூறி சீக்கிரமாய் அதைச் செய்யச்சொல்லி கட்டளையிட்டார்.

அதைக்கேட்டு நகை செய்பவர் தன்னால் எப்படி அந்த மாதிரி மோதிரத்தை செய்யமுடியும்? என்று கலங்கியவராக தன் வீட்டிற்குச் சென்றுக் கொண்டிருந்தார். அப்போது வழியில் இளவரசன் சாலமோனைக் கண்டார். சாலமோனும் அவரைக் கண்டு, ஏன் இப்படி கவலையோடு போய்க் கொண்டிருக்கிறீர்? என்று கேட்டார். தட்டான் நடந்ததைக் கூறியவுடன், இதற்கு போயா கலங்குகிறீர்கள்? ஒரு சாதாரண மோதிரத்தை உண்டாக்கி, அதன் மேல் **‘இதுவும் கடந்துபோகும்’** என்ற எழுத்துக்களை பதித்து விடுங்கள். ராஜா அதை அணிந்து தன்னுடைய சோக சூழ்நிலையில் அதைக் காணும்போது, இது சீக்கிரமாய் கடந்துப்போய்விடும் என்று மகிழ்ச்சி அடைவார். அதே சமயம் மகிழ்ச்சியாயிருக்கும்போது இதைப் பார்த்தால் இந்த மகிழ்ச்சி கடந்துபோகும் என்று துக்கமடைவார் என்று கூறினார்.

அப்படியே அந்தத் தட்டானும் செய்து தாவீது ராஜாவிடம் கொடுத்தபோது, அவர் மகிழ்ச்சியடைந்து அவருக்கு பரிசுகளை வழங்கினார். மட்டுமல்ல தன் மகனின் புத்திக் கூர்மையை பாராட்டினார்.

நாம் வாழும் வாழ்க்கை மிகக் குறுகியது. இந்த உலகமும், அதன் ஆசை இச்சைகளும் ஒருநாள் அழிந்துப்போய்விடும். ஆனால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின்மேல் நாம் வைக்கும் நம்பிக்கை இந்த உலகத்திற்கு

மாத்திரமல்ல, நாம் நித்தியமாய் வாழப்போகும் பரலோக ராஜ்ஜியத்திற்கும் நம்மைக்கொண்டு சேர்த்து வாழ வைக்கும்.

சமீபத்தில் நான் ஒரு செய்தியைக் கேட்டு கொண்டிருந்தபோது செய்தியாளர் சொன்னார் ‘என்னவோ நாம் யுகயுகமாய் இந்த உலகத்தில் வாழப்போகிறதுப்போல நம் உடல்நிலை சரியில்லையென்றால், கோடி கோடியாய் பணத்தை இறைத்து சரிப்படுத்தப் பார்க்கிறோம். ஆனால் நித்திய நித்தியமாய் மறுமையில் வாழப்போகும் வாழ்க்கையைக் குறித்து சிறிதளவும் கவலையின்றி வாழ்ந்துக் கொண்டிருக்கிறோம்’ என்று. அது எத்தனை உண்மை!

**அன்புடன் போதகர்**

## தாத்தாவுக்கு சொர்க்கம் பிடிக்குது



ஒரு முதியவர் தனது பேரனிடம் பேரனே, சொர்க்கத்துக்கு நுழைவது இலவசம், ஆனால் நரகத்துக்கு நுழைய பணம் வேண்டும்.

**பேரன்** : அது எப்படி தாத்தா?

**முதியவர்** : சூதாட்டத்துக்கு பணம் வேண்டும்
மது அருந்த பணம் வேண்டும்,
சிகரெட் புகைக்க பணம் வேண்டும்,
கூடாத இசைக் கேட்க பணம் வேண்டும்,
பாவங்களோடு பயணிக்க பணம் வேண்டும்,

ஆனால் மகனே!
அன்பு காட்ட பணம் தேவையில்லை,
கடவுளை வணங்க பணம் தேவையில்லை,
சேவையை செய்ய பணம் தேவையில்லை,
விரதம் இருக்க பணம் தேவையில்லை,
மன்னிப்பு கோர பணம் தேவையில்லை,
பார்வையை தாழ்த்த பணம் தேவையில்லை,
நம் உரிமையை நிலைநாட்ட பணம் தேவையில்லை,
இத்தனைக்கும் மேலாக
இறைவன் நாமம் சொல்ல வேறெதுவும் தேவையில்லை.
பேரனே!

நீ பணம் கொடுத்து நரகத்தை விரும்புகிறாயா?
இலவசமான சொர்க்கத்தை நேசிக்கிறாயா?

முதியோரின் அணுகுமுறை எவ்வளவு அழகாக உள்ளது.

## இன்றே இரட்சண்ய நாள்



**மண்ணில்** : 17-06-1703
**விண்ணில்** : 02-03-1791
**ஊர்** : எப்வொர்த். லிங்கன்ஷயர்
**நாடு** : இங்கிலாந்து
**தரிசன பூமி** : இங்கிலாந்து

இங்கிலாந்து திருச்சபை, தந்தையைப் பின்பற்றி போதகரானார் ஜான் வெஸ்லி. "ஆவிக்குரிய மனந்திரும்புதலே சரியான கிறிஸ்தவ வாழ்க்கை" என்று போதிக்கத் தொடங்கினார். ஆனால் அவர் பணியாற்றிய திருச்சபை, வெஸ்லியை வேத புரட்டராகக் கண்டிக்கவே இங்கிலாந்து திருச்சபையை விட்டு வெளியேறினார். திறந்தவெளி பிரசங்கியானார்.

தெருத்தெருவாக இவர் செய்த பிரசங்கத்தால் திரளான மக்கள் இரட்சிப்பின் அனுபவத்திற்குள் அனுதினமும் வந்தனர். இப்புதிய விசுவாசிகளை பராமரித்து வளர்க்கும் பொறுப்பு அவரைச் சார்ந்ததால் 'மெதடிஸ்ட்' என்ற புதிய திருச்சபையை ஸ்தாபித்தார்.

நற்செய்தியை அறிவிப்பது இவருக்குத் தேன் சுவைபோல் காணப்பட்டது. இங்கிலாந்து தேசம் முழுவதும் 2 லட்சத்து 50 ஆயிரம் மைல்கள் குதிரையில் சவாரி செய்து, 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பிரசங்கங்கள் செய்துள்ளார். 200-க்கும் மேற்பட்ட ஆவிக்குரிய புத்தகங்களை எழுதியுள்ளார்.

சமயப்பணிக்கும், சமுதாயப்பணிக்கும் சம்பந்தமில்லை என்று கருதப்பட்டக் காலத்தில் சமுதாயப்புரட்சி செய்ததால் **'சமுதாயச் சிற்பி'** என்று அழைக்கப்பட்டார்.

இங்கிலாந்தின் முதலாவது இலவச மருந்தகம், இலவச பள்ளிக்கூடம், இலவச ஆதரவற்றோர் இல்லங்கள் என ஏராளமான நன்மைகளைச் செய்துள்ளார். அடிமை முறைகளை அகற்றவும் அரும்பாடுபட்ட ஜான் வெஸ்லி தமது 88-வது வயதில் இவ்வுலகைவிட்டு விடைப்பெற்றார்.

அன்பரே! ஜான் வெஸ்லியைப் போன்று சுவிசேஷத்தை சுறுசுறுப்புடன் அறிவிக்க உங்களை அர்ப்பணிப்பீர்களா?

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு** : உற்சாகத்துடன் எரிபந்தமாய் சென்றிடு, நீ எரிவதை கண்டிட மக்கள் பலமைல் தூரம் நடந்து வந்து கவனிப்பர்.

**குயவனின் கரங்களில்** : ஆண்டவரே! சமயப் பணியோடு சமுதாயப் பணிகளையும் செய்ய ஆயத்தமாயிருக்கிறேன்.

## லெந்து காலம் ~ நாற்பது நாட்கள்




கடந்த மாதத்தின் 26-ம் தேதி சாம்பல் புதன் ஆராதனை நடைபெற்றது. அதைத் தொடர்ந்து வருகிற நாட்களை நாம் தவகாலமாக ஆசரிக்கிறோம். வழக்கமாக ஒவ்வொரு நாளும் திருமறை வாசித்து, ஜெபிக்கிற பழக்கம் சிலரிடத்தில் உண்டு. ஆனால் லெந்து காலங்கள் இன்னும் அதிகமாய் ஆண்டவருக்குள்ளாய் வளர உபயோகமாய் இருக்கும். ஏதோ நாம் அதிகப்படியாய் செய்கிற சில செலவினங்களை குறைத்து சுயஒறுத்தலின் அடையாளமாக நமது கரங்களில் தரப்படுகிற உண்டியலில் காணிக்கையாக்கி ஆலயத்திலே படைக்க ஆயத்தப்படுவோம். தரித்திரர்களுக்கு இரங்குவதும் நமது கட்டாயமான கடமை. இந்த சிறியரில் ஒருவருக்கு செய்யும் நற்கிரியை, தானதர்மம் நமது ஆண்டவருக்கு நாம் செய்யும் நற்கிரியை எனத் திருமறைக் கூறுகிறது. எனவே லெந்துகாலத்தை சரியாய் பயன்படுத்திக்கொள்ளுங்கள்.

லெந்துகாலத்தை தவக்காலம் என்றும் அழைப்பதும் உண்டு. இந்த காலம் உடலை வருத்திக்கொள்வதற்கு அல்ல, உள்ளத்தை திருத்திக் கொள்வதற்கே. சாம்பல் புதன் முதல் ஈஸ்டர் வரை ஓய்வுநாட்கள் நீங்கலாக நாற்பது நாட்கள் இதை ஆசரிக்கிறோம். நாற்பது என்ற எண் திருமறையில் ஆன்மீக பொருள் மிகுந்த எண்ணாக இருக்கிறது.

நோவா கால பெருவெள்ளம் நாற்பது நாட்கள் நீடித்தது. 10 கட்டளைகளைப் பெற மோசே சீனாய் மலையில் நாற்பது நாட்கள் கர்த்தரோடு இருந்தார். ஓரேப் மலையில் எலியா நாற்பது நாட்கள் கர்த்தரோடு நடந்துள்ளார். நினிவேக்கு யோனா எச்சரிப்புக் கொடுக்கும்போது இன்னும் நாற்பது நாட்கள் என்று எச்சரித்துள்ளார். இந்த பின்னணியில் தான் லெந்து நாட்கள் நாற்பது நாட்களாக ஆசரிக்கப்படுகிறது. நாமும் இந்த நாட்களை பிரயோஜனப்படுத்திக் கொள்வோம்.

## துக்கம் பகிர்வோம்

### கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்

நமது சபை அங்கத்தினர் Mr. Jose Chandra Bose அவர்களின் மனைவியின் தகப்பனார் திரு. P. பாலையன் அவர்கள் பெப்ரவரி மாதம் 21-ஆம் தேதி கிறிஸ்துவுக்குள் இறை அழைப்பைப் பெற்றார்கள். அவர்களை இழந்து தவிக்கும் குடும்பத்திற்கு கடவுள் ஆறுதலையும், சமாதானத்தையும் அருள்வாராக.

## பாடலின் பின்னணியம்

### நீயுனக்கு சொந்தமல்லவே

**பாடல் : தே. தேவசகாயம்** **ராகம் : தே.தேவசகாயம்**

**பல்லவி**

நீயுனக்குச் சொந்தமல்லவே, மீட்கப்பட்ட பாவி
நீயுனக்குச் சொந்தமல்லவே

**அனுபல்லவி**

நீயுனக்குச் சொந்தமல்லவே
நிமலன் கிறிஸ்து நாதர்க்கே சொந்தம்

1. சிலுவை மரத்திற் றொங்கி மரித்தாரே; திருரத்தம், ரத்தம்
திரு விலாவில் வடியுதே பாரே;
மிகுந்த பரிசத்தால் கொண்டாரே
மோட்ச மகிமை யுனக்கீவாரே

கவிஞர் தே. தேவசகாயம் சாட்சியாபுரத்தைச் சேர்ந்தவர். அவருக்கு மேசியாதாஸ், தேவநேசன் என்று இரு குமாரர்கள் உண்டு. ஒருநாள் இவ்விரு பையன்களும் பள்ளிக்குப் புறப்படும் நேரத்தில், ஏதோ ஒரு பொருளுக்காக, “இது என்னுடையது; உன்னுடையதல்ல” என்று கூச்சலிட்டு சண்டை போட்டனர். அவர்களை சமாதானப்படுத்த முயன்ற தந்தையின் உள்ளத்தில், பவுலடியாரின் வேத அறிவுரை நினைவில் வந்தது.

இந்நிகழ்ச்சியில் உள்ளக்கிளர்ச்சி பெற்ற இக்கவிஞர், இந்த பாடலின் முதல் வரியை, “நீ உனக்கு சொந்தமல்லவே, தாசா, நேசா,” என்பதாக எழுதினார்.

“ஒவ்வொரு கிறிஸ்தவனும் இறைவன் இயேசுவின் விலையேறப்பெற்ற ரத்தத்தால் மீட்டெடுக்கப்பட்ட அடிமை, எனவே தனக்கென்று உரிமை பாராட்ட தகுதியற்றவன்” இக்கருத்தை மையமாகக் கொண்டு இந்த அருமையான பாடலை, தேவசகாயம் தன் பிள்ளைகளுக்கென எழுதினார். அதையே திருச்சபை பிள்ளைகளாகிய நம் அனைவருக்கும் பயன்படும் வகையில், “தாசா…நேசா…” என்ற வார்த்தைகள் நீக்கப்பட்டு “மீட்கப்பட்ட பாவி” என்ற வார்த்தைகள் அவ்விடத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

தம் ஜீவனையே ஈனச் சிலுவையில் கிரயமாகச் செலுத்தி, பாவிகளாகிய நம்மை மீட்டெடுத்த இயேசுவுக்கே நாம் சொந்தம். எனவே பழைய ஏற்பாட்டுக் கால விருப்ப அடிமைகளைப் போல நாமும், தொடர்ந்து ஜீவ காலம் முழுவதும் அவரையே அண்டி வாழவேண்டும். அவரை விட்டு ஓட

முயற்சிக்கலாகாது. பழைய வாழ்க்கையின் மீது மீண்டும் நாட்டம் கொள்ளக்கூடாது'' என்ற கிறிஸ்தவத் தத்துவக் கருத்துக்களை அழகாக, தெளிவாக இப்பாடலில் தமது மைந்தர்களுக்காக இக்கவிஞர் எழுதியிருக்கிறார்.

இப்பாடலின் கடைசி சரணத்தைச் சார்ந்த ஒரு நிகழ்ச்சியைக் கிறிஸ்தவ அருட்கவிஞராகிய அருட்திரு டாக்டர். தயானந்தன் பிரான்சிஸ் இவ்வாறு எழுதுகிறார். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த டாக்டர் D.T நைல்ஸ் என்ற பெரியார், வேலூர் கிறிஸ்தவ மருத்துவமனையில் சிகிச்சைக்காக வந்திருந்தார். அவருக்குப் புற்றுநோய் கண்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டபோது அவர் எவ்வித மனக்கலக்கமும் அடையாமல் மருத்துவர்களையும் நண்பர்களையும் பார்த்து ``நாம் பிழைத்தாலும், மரித்தாலும் ஆண்டவருக்கு சொந்தமானவர்கள்'' என்று கூறினார்.

இந்த நிலையான கிறிஸ்தவ நம்பிக்கையைப் பிரதிபலிக்கும் இப்பாடலை கவிஞர் தேவசகாயம் எவ்வளவு நேர்த்தியாக எழுதியிருக்கிறார்!

கவிஞர் தேவசகாயம் இயற்றிய மற்றுமிரு பாடல்களும் திருச்சபை மக்களால் விரும்பி பாடப்படுகின்றன. அவை ``வா பாவி மலைத்து நில்லாதே, வா'' என்ற அன்பின் அழைப்புப் பாடலும், ``அடைக்கலம் அடைக்கலமே'' என்ற நம்பிக்கையூட்டும் பாடலுமாகும்.

**பாடகர் குழு - CSI Tamil Church – Oman (நன்றி : கிறிஸ்து சபை கீர்த்தனை ராகங்கள்)**

## திருமறைப்பாடம் வாசிப்பவர்கள் ~ மார்ச் 2020

| | | |
|---|---|---|
| 06-03-2020 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Manju Martin |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Mayshack |
| 13-03-2020 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Mary Praveena Gobi |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Mohan Babu |
| 20-03-2020 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Monisha Jerry Jones |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Nethaji Jacob Durai |
| 27-03-2020 | முதலாம் திருமறைப்பகுதி | Mr. Nisha Broosewelt |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Pratheesh |
| 03-04-2020 | முதலாம் திருமறைப்பகுதி | Mr. Nisha Rajan |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Praveen |

# பெண்கள் ஐக்கிய சங்க அறிக்கை – பெப்ரவரி 2020




இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் பாலைவன மன்னா வாசகர்கள் அனைவருக்கும் பெண்கள் ஐக்கிய சங்கத்தின் சார்பில் அன்பின் வாழ்த்துக்கள்.

கர்த்தரின் பெரிதான கிருபையினால் இந்த வருடத்தின் முதலாவது பெண்கள் சங்க கூடுகை, பெப்ரவரி மாதம் 20-ம் தேதி CSI Malayalam Hall-ல் வைத்து நடைபெற்றது. முதலாவதாக ஸ்தோத்திர பாடல்கள் பாடப்பட்டு, இரவு 9 மணிக்கு கூடுகை ஆரம்பமானது. பின்னர் போதகர் அவர்கள் கர்த்தர் இந்த வருடம் முழுவதும் பெண்கள் ஐக்கிய சங்கத்தினை வழிநடத்துமாறு ஜெபம் ஏறெடுத்து, சில அறிவிப்புகளையும், ஆலோசனைகளையும் வழங்கினார்கள். அவை பின்வருமாறு;

1. பெண்கள் சங்க அங்கத்தினர் கூடுகைக்கு சரியான நேரத்திற்கு வருமாறும்,
2. பெப்ரவரி மாதம் 21-ம் தேதி நடக்கவிருந்த பெண்கள் சங்க விற்பனை விழா குறித்த ஆலோசனைகளையும்,
3. இந்த வருடத்தின் ஆண்டு தேர்வு பகுதியாக லூக்கா சுவிசேஷம் என்பதனையும் அறிவித்தார்கள்.

தொடர்ந்து **திருமதி. ஷைனி ஜோகன்** அவர்கள் **"ஜெபத்தின் மேன்மை மற்றும் நன்மைகள்"** குறித்து வேதவசனங்கள் மற்றும் அனுபவ சாட்சியுடனும் பகிர்ந்து கொண்டார்கள். தேவசெய்தி அனைவருக்கும் ஆசீர்வாதமாக இருந்தது.

அதன்பின் **திருமதி. ஜெகதா ஜினோ** அவர்கள் ஜெபக்குறிப்புகளைப் பகிர்ந்துகொள்ள, அந்த ஜெபக்குறிப்புகளுக்காக ஊக்கமான ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. தொடர்ந்து சாட்சி வேளையில் அநேக சகோதரிகள் கர்த்தர் தங்கள் வாழ்வில் செய்த நன்மைகளை சாட்சியாக அறிவித்தும், ஜெபக்குறிப்புகளையும் பகிர்ந்துகொண்டார்கள்.

இறுதியாக சாட்சி சொன்னவர்களுக்காவும், ஜெபக்குறிப்புகளுக்காகவும், Sponsors செய்தவர்களுக்காவும், மற்றும் வந்திருந்த அனைவருக்காகவும் திருமதி. சாரா ராஜாசிங் ஜெபம் ஏறெடுத்து, பெண்கள் சங்கமானது 11 மணியளவில் இனிதே நிறைவுபெற்றது.

இறுதியில் Sponsor செய்த **Mrs. Priyadarsini Kanagavel** மற்றும் **Mrs. Priya Ramesh** அவர்கள் சார்பில் சிற்றுண்டி வழங்கப்பட்டது. அவர்கள் குடும்பங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தேவன்தாமே அவர்களை ஆசீர்வதித்து வழிநடத்துவாராக.

இனிவரும் நாட்களில் அனைவரும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு தேவ ஆசீர்வாதத்தைப் பெற்றுச் செல்லுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**திருமதி. சாரா ராஜாசிங்**
**பெண்கள் ஐக்கிய சங்க செயலர்**

## ஆண்கள் ஐக்கிய சங்க அறிக்கை – பெப்ரவரி 2020




ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் பாலைவன மன்னா வாசகர்களுக்கு அன்பின் வாழ்த்துக்கள்.

ஆண்டவரின் மகா கிருபையால் நமது சபையின் ஆண்கள் சங்கமானது 20-02-2020 அன்று இரவு 9 மணிக்கு சங்க செயலர் அவர்களின் ஜெபத்துடன் ஆரம்பமானது. ஆவிக்குரிய பாடல்களை பாடி போதகர் அவர்களால் நன்றி ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. பின்பு மத்தேயு 6:24-34 வரை வசனங்கள் வாசிக்கப்பட்டது. அந்த வசனங்களின் அடிப்படையில் சபைப் போதகர் Rev. Dr. N. Jesin அவர்கள் ஆண்டவருடைய வார்த்தையை பகிர்ந்து கொண்டார்கள்.

**தலைப்பு : "கவனித்துப் பாருங்கள்"**

1. நம்மை சுற்றிலும் இருப்பவரைக் கவனித்தல்
2. நம்மை கவனித்தல்
3. படைத்தவரை கவனித்துப் பார்த்தல் வேண்டும்.

என்னும் செய்தி அனைவருக்கும் ஆசீர்வாதமாக இருந்தது.

பின்பு சாட்சி வேளையில் அங்கத்தினர்கள் சாட்சி கூறினார்கள். தொடர்ந்து இந்திய தேசத்திற்காகவும், ஓமான் தேசத்திற்காகவும், திருச்சபைக்காகவும் ஊக்கமாக ஜெபிக்கப்பட்டது. 11 மணியளவில் போதகர் ஜெபத்துடன் கூட்டம் நிறைவடைந்தது. கலந்துகொண்ட விசுவாசிகள் அனைவருக்கும் நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

**கூடுகையை தாங்கியவர்கள் : Mr. Austin Daniel & Mr. Alex Baskar**
அவர்களுக்கு ஆண்கள் ஐக்கிய சங்கத்தின் சார்பாக நன்றியைக் கூறுகிறோம்.

ஆண்கள் சங்க உறுப்பினர்கள் மிஷெனெரியை 1 ரியால் கொடுத்து தாங்க வாக்கு கொடுத்துள்ளார்கள். அநேகர் இன்னும் மிஷெனெரியை தாங்க முன்வாருங்கள். ஆண்டவர் இரட்டிப்பான ஆசீர்வாதத்தால் நிரப்புவார்.

திருச்சபையின் ஆண்கள் அனைவரும் ஆண்கள் ஐக்கிய சங்கத்தில் கலந்துகொண்டு தேவாசீர்வாதம் பெற்றுச்செல்ல அன்புடன் அழைக்கிறோம்.

**திரு. சைலஸ்**
**ஆண்கள் ஐக்கிய சங்க செயலர்**

## ஜெபிக்க சில குறிப்புகள்

### திருச்சபைக்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

- நமது திருச்சபை போதகருக்காகவும், குடும்பத்திற்காகவும், ஆரோக்கியத்திற்காகவும், திருப்பணிகளுக்காகவும் ஜெபிப்போம்.
- நமது திருச்சபையின் முன்னாள் குருவானவர்களுக்காகவும், அவர்கள் குடும்பங்களுக்காகவும், ஆரோக்கியத்திற்காகவும் ஜெபிப்போம்.
- நமது சபைக்கான போதகர் விசா விரைவில் கிடைப்பதற்காகவும் ஜெபிப்போம்.
- சபையின் நிர்வாக குழுவுக்காகவும், அவர்கள் தெய்வ பயத்தோடு திருச்சபையின் கடமைகளை நிறைவேற்றிடவும் ஜெபிப்போம்.
- திருச்சபையின் கிளைச்சங்கங்கள் சிறப்பாக செயல்பட, நல்ல வளர்ச்சி காண ஜெபிப்போம்.
- எல்லா ஆராதனைகளும் சிறப்பாய் நடைபெறவும், பங்கேற்போர் தேவாசீர்வாதம் பெறவும் ஜெபிப்போம்.
- திருச்சபைப் பணிகளை தன்னார்வமாய், உற்சாகமாய் தாங்கிவரும் அங்கத்தினர்களுக்காக ஜெபிப்போம்.
- பலர் நம்மோடு இணைந்து ஆண்டவரை ஆராதிக்கவும், திருச்சபை புதிய வளர்ச்சி பெறவும் கருத்தாய் ஜெபிப்போம்.
- இந்தியாவிலுள்ள நமது சொந்த திருச்சபைக்காகவும், பேராயங்களுக்காகவும், அதன் வளர்ச்சிக்காகவும், பேராயர், போதகர்கள் குடும்பத்திற்காகவும், திருப்பணி வளர்ச்சிக்காகவும் ஜெபிப்போம்.
- நமது பேராயத்தின் பேராயர் Rt. Rev. Dr. செல்லையா அவர்கள் இறைபணி மூலம், இறை சித்தம் நிறைவேற்றும் பேராயராய் செயல்பட்டு, பேராயம் நல்ல முறையில் இயங்கவும், இறையருள் வேண்டி மன்றாடுவோம்.

### மிஷனெரி பணிகளுக்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

- நாம் தாங்கிவரும் 11 மிஷனெரிகளுக்காகவும், அவர்கள் தம் பணிக்களங்களில் செய்யும் அருட்பணிகளுக்காகவும், அவர்களது குடும்பங்களின் ஆசீர்வாதத்திற்காகவும் ஜெபிப்போம்.

- நமது தேசத்தில் நடைபெறும் எல்லா மிஷனெரி பணிகளுக்காகவும், பணித்தளங்களில் மிஷனெரிகள் சந்திக்கும் பிரச்சனைகளை அவர்கள் மேற்கொண்டு, தொடர்ந்து தைரியமாய் ஊழியம் செய்ய இறைபெலன் பெற்றுக்கொள்ள ஜெபிப்போம்.
- ஆலயங்கள் கட்டப்பட அனுமதி கிடைக்காமல் இருக்கிற திருச்சபைகளுக்காக கருத்தாய் ஜெபிப்போம்.
- வேதாகம சங்கத்தின் பணிகளுக்காக, தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம்.
- தொழுகைகள் நடத்த இயலாமல் தடைபடுத்தும் மக்கள் இரட்சிக்கப்படவும் ஜெபிப்போம்.

**தேசத்திற்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-**

- தேசத்தலைவர்களுக்காகவும், அரசு அதிகாரிகளுக்காகவும், அதிகாரத்திலுள்ள அனைவரும் நேர்மையும் பயனுள்ள வகையிலும் ஆளுகைசெய்ய ஆண்டவரிடம் மன்றாடுவோம்.
- இன்றைய நம் நாட்டின் எல்லாத் துறைகளிலும் லஞ்சம் தலைவிரித்தாடுகிறது. இதனால் ஏழை எளிய மக்கள் அரசு சலுகைகளை, உரிமைகளைக்கூட சரிவர பெறமுடியாதச் சூழலில், ஊழல் என்னும் தீமை அகல ஆண்டவரிடம் மன்றாடுவோம்.
- மது என்னும் தீமை இன்றைய சமுதாயத்தையும், குடும்பத்தையும், தனிமனித வாழ்வையும் பெரிதும் பாதித்துவரும் சூழலில் தமிழகத்தில் பூரண மதுவிலக்கு கொண்டுவரப்பட ஆண்டவரை நோக்கி மன்றாடுவோம்.
- வாழ்வில் குறுக்கிடும் துன்பம், தோல்வி, நோய், கடன்பாரம் போன்றவைகளுக்கு தீர்வு தற்கொலையே என்கிற முடிவில் பலர் தங்களுக்கு ஆண்டவர் ஈவாக தந்த உயிரை தாங்களே அழித்து வருகின்றனர். குறிப்பாக இளம் தலைமுறையினரே அதிக எண்ணிக்கையில் தற்கொலை செய்துவரும் சூழலில், தற்கொலை என்னும் தீமை முழுமையாக அகல ஆண்டவரிடம் மன்றாடுவோம்.
- வேலையின்றி வாடுவோருக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்க அரசு புதிய தொழில் நிறுவனங்கள் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள ஆண்டவரிடம் மன்றாடுவோம்.
- இந்திய தேசத்தின் பொருளாதார வீழ்ச்சி நிலைமாற மன்றாடுவோம்.
- உலகம் முழுவதும் கொரோனோ வைரஸ் மூலம் பரவிவரும் தொற்றுநோய் விரைவில் குணமடைய ஆண்டவரிடம் மன்றாடுவோம்.

## குடும்பங்களுக்காக ஜெபிக்க:-

- இந்த புதிய மாதத்தில் கர்த்தர் நம் ஒவ்வொருவரது குடும்பங்களையும் ஆசீர்வதிக்க ஜெபிப்போம்.
- சிறுகுழந்தைகள், சிறுவர்கள், வாலிபர்கள், பெற்றோர், முதியோர் என எல்லாரும் ஆண்டவரது கிருபை பெற்றிட ஜெபிப்போம்.
- வியாதி, கடன், வேலை இழப்பு, விசா பிரச்சனை, எதிர்பார்ப்புகள் நிறைவேறாமை, குழந்தையின்மை, வழக்குகள் இவற்றினால் கஷ்டபடுகிறவர்களுக்காக ஜெபிப்போம்.
- தீய பழக்கமுடையோரின் மனமாற்றத்துக்காக ஜெபிப்போம்.
- கருவுற்றிருக்கிற சகோதரிகளின் உடல்நலத்திற்காகவும், சுகமான விடுதலைக்காகவும், தாய் சேய் ஆரோக்கியத்திற்காகவும் ஜெபிப்போம்.

# உயர்வளிக்கும் கடவுள்

இறைவன் அதிசயமானவர் என்பதை அவரது படைப்புகள் உறுதி செய்கின்றன. நலிவுற்ற மக்கள் வாழ்வில் அவர் அதிசயம் செய்கிறார் என்பதை எகிப்திலிருந்து மீட்கப்பட்ட இஸ்ரவேலர்களின் வரலாறு உறுதிசெய்கிறது. கடவுள் அதிசயங்களை செய்வதற்கு ஆற்றல் உள்ள மக்கள் கூட்டத்தை தெரிந்துகொள்வதில்லை. மனிதனுடைய பராக்கிரமத்தையோ, புயபலத்தையோ, எண்ணிக்கையையோ, கல்வியையோ ஆதாரமாக கொண்டு செய்வதில்லை. கடவுள் நம்மேல் இரக்கம் கொண்டு நம் பாவங்களையெல்லாம் மன்னித்து மனித செயல்களுக்குதக்க கோபம் கொள்ளாமல் நம்மை அவர் அருளினால் நிரப்பி வாழ்வளிக்க வல்லவராய் இருக்கிறார்.

## 1. எல்லைகளை விரிவாக்கி உயர்வடையச் செய்யும் கடவுள் :-

உபா. 19:9-ன் படி மனிதனை ஆசீர்வதிப்பதே இறைவனுக்குப் பிரியம். எல்லைகளை விரிவுபடுத்துவதை அனைவரும் விரும்புகின்றனர். நாடுகளும் தங்கள் எல்லைகளை விரிவாக்க முயற்சி செய்கின்றன.

கடவுள் நமது எல்லையை விரிவாக்க வேண்டுமெனில் ஒரு நிபந்தனையை வைக்கிறார். இன்று நான் உனக்கு விதிக்கும் இந்த எல்லா கற்பனைகளையும் கைக்கொண்டு அதின்படி செய்யவேண்டும் (உபாகமம் 28) என்பதே அந்த விதிமுறை. கடவுள் கட்டளையிட்ட கற்பனைகளை, விதிமுறைகளை நம் வாழ்வில் கடைபிடிக்க வேண்டும் என்பதே அவரது தலயாய விருப்பம். கட்டளைகளை கைக்கொள்ளும்போது கடவுள் நம்மில் தஞ்சம் ஆகிறார். அவரது அருள் கிடைப்பதே நமக்கு சிறந்த ஆஸ்தி. அவரை நம் அருட்செல்வமாகக் கொள்ளும்போது நம் இதயத்தின் எல்லை

விசாலமாகும். பரந்த இதயமுடையோர் பிறருக்கு பகிர்ந்தளிப்பர். கொடுப்பதைத் திரும்பக் கொடுக்கும் கடவுள் தம் அருட்செல்வங்களால் நம்மை நிறைவாக்குவார்.

ஆனால் இன்று கடவுளின் நிபந்தனைகளைக் கைக்கொண்டு செயல்படுவதற்கு மனிதனுக்கு பொறுமையும் விருப்பமும் இல்லை. நேர்மை வழியில் சேர்க்கும் செல்வம் நிலைநிற்கும் என்பதால் நேர்மை வழியில் அன்பு எல்லையை விரிவாக்கி அதை நிலைநாட்டவேண்டியது நம் பொறுப்பு.

## 2. தாழ்வில் உயர்வடையச் செய்யும் கடவுள்:-

மாற்கு 12:10 "வீடுகட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே மூலைக்குத் தலைக்கல்லாயிற்று".

இறைவனின் படைப்பில் மானுடம் உயர்வானது. உரிமைகள் அனைவருக்கம் சமமாய் தரப்பட்டுள்ளது. உரிமைகள் பெற்று சமமாய் வாழவேண்டிய மனித சமூகம் பல்வேறு காரணிகளால் உயர்ந்தும் தாழ்ந்தும் பல்வேறு ஏற்றத்தாழ்வுகளுக்கு உட்பட்டு சீரழிந்து கொண்டிருக்கிறது.

யோசேப்பு தன் பெற்றோரையும், சகோதரரையும் நேசித்தார். தான் கண்ட கனவுகளை ஒளிவு மறைவின்றி தம்மவர்களுக்கு அறிவித்தார். அன்பு காட்ட வேண்டிய சகோதரர்கள் குழியில் தள்ளினார்கள். இஸ்மவேலருக்கு விற்றுப்போட்டார்கள். போத்திப்பாரின் வீட்டில், மனச்சாட்சிக்கும் இறைவனுக்கும் பயந்து செயல்பட்டும் பாடுகளை ஏற்றார். சிறையில் அடைக்கப்பட்டார். சிறையிலிருந்தாலும் கைதிகளுக்குப் பொறுமையாய் பணி செய்தார். தாழ்வடைவார் என சகோதரர்கள் எண்ணினார்கள். போத்திப்பாரின் மனைவி தாழ்வடைவார் என எண்ணினாள். ஆனால் இறைவன் யோசேப்பை உயர்த்தினார்.

நமது ஆண்டவர் இயேசு தாழ்வில் இறங்கி, தாழ்வில் இருந்தவர்களை உயர்த்த விரும்பினார். இச்செயலின் விளைவே சிலுவையில் உயிர்த்தெழுந்த இயேசு தூயவராயிருந்து நமக்கும், உலகமனைத்துக்கும் உயர்வைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார். நம்மை ராஜாக்களும் ஆசாரியர்களுமாய் உயர்த்தியுள்ளார்.

தோட்டத்தில் நின்ற மூங்கில் மரம் வெட்டி தனியாகப் போடப்பட்டிருந்தது. ஒருவர் அதை எடுத்து அழகுப்படுத்தி சிறுசிறு வேலைப்பாடுகளை செய்தபோது புல்லாங்குழலாக மாறி பலரை மகிழ்வித்தது. பயனுள்ள பொருளாகவும் மாறியது. நாமும் சமூகத்தால் பல்வேறு காரணங்களைக் காட்டி தள்ளப்படலாம். ஆனால் சோர்ந்துபோகாமல் பொறுமையோடு இருப்போம். கடவுள் தாழ்ந்த நிலையிலிருக்கும் நம்மை உயர்த்துவார். இதுவே கடவுளின் இலட்சியம் என்பதை மறவாதிருப்போம்.

**- V. J. மஹிழா ஜெங்கின்**

# May God Bless All

## Birthday Celebrants – March 2020

| | |
|---|---|
| 01st March | Master. Stalin Joseph, S/o Mr. Selvamani |
| 02nd March | Mr. Broosewelt |
| 02nd March | Mr. Joel Gnanasekaran |
| 03rd March | Master. Hadyn, S/o Mr. V.N. Rajan |
| 04th March | Mrs. Jancy, W/o Mr. David Sundar Sing |
| 05th March | Mr. S. Nethaji Jacob Durai |
| 05th March | Master. Aaric Ryan, S/o Mr. C.A. Vinu |
| 07th March | Mr. Jino John |
| 08th March | Master. G. Liffin Sam, S/o Mr. Gnanadhas |
| 09th March | Mr. Jerry Jones |
| 09th March | Mrs. Esther, W/o Mr. Vimal Kumar Stephen |
| 11th March | Mr. Vinobha Alagesan |
| 14th March | Master. J.S. Jolan Shano, S/o Mr. Jino Retna Kumar |
| 16th March | Mr. Giridharan, S/o Mr. Moorthy |
| 17th March | Miss. Herlin Reniba, D/o Mr. Herbert Goldston |
| 17th March | Miss. Aksha Judith Cynthiya, D/o Mr. Alex Baskar |
| 17th March | Mr. B. Kingsly |
| 18th March | Master. S. Deejin Samuel, S/o Mr. Sujin Issac Samuel |
| 18th March | Mr. C. Sujin |
| 19th March | Miss. Asna, D/o Mr. J.P. Prince |
| 22nd March | Mrs. Mary Suja, W/o Mr. Kingsly |
| 22nd March | Master. Asmith Sam Augustin, S/o Mr. Augustin |
| 24th March | Mrs. Sujatha Shalini, W/o Mr. Jino Retna Kumar |
| 24th March | Miss. Rachel, D/o Mr. Gnana Ruban |
| 24th March | Miss. Hazel, D/o Mr. Gnana Ruban |
| 28th March | Mr. Jenil sing |
| 29th March | Miss. Reya Ann, D/o Mr. Prem Meshach |

## மார்ச் 2020 மாத கேள்விகள்
## (நெகேமியா முழுவதும்)

1. எருசலேம் அலங்கம் எத்தனை நாளில் கட்டப்பட்டது?
2. யூதா தேசத்துக்கு அனுப்பும்படி நெகேமியா யாரிடம் வேண்டினான்?
3. எது ஏறிப்போனால் கல் மதில் இடிந்துபோகும்?
4. எதற்காக உம்முடைய நல் ஆவியைக் கட்டளையிட்டீர்?
5. குப்பைமேட்டு வாசலை பழுதுபார்த்து கட்டிய பெத்கேரேமின் மாகாணத்துப் பிரபுவின் மகன் யார்?
6. இஸ்ரவேல் புத்திரரின் நன்மையை விசாரிக்க ஒருவன் வந்தான் என்று விசனப்பட்டவர்கள் யார்?
7. தன் வீட்டிலே அடைக்கப்பட்டிருந்தவன் யார்?
8. லேவியராகிய அசரியாவின் குமாரன் யார்?
9. எதனுடைய வாசல் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டது?
10. இஸ்ரவேல் புத்திரரை சபிக்க யாரை கூலிக்கு பொருத்திக்கொண்டனர்?
11. திர்ஷாதா என்னப்பட்டவர் யார்?
12. எருசலேமின் காவல் விசாரணைக்கு ஏற்படுத்தப்பட்ட அரண்மனை தலைவன் யார்?
13. சகல கடன்களையும் விட்டுவிடுவோம் என்று ஆணையிட்டு பிரமாணம் பண்ணிய விடுதலையின் வருஷம் எது?
14. தேவனுடைய ஆலயத்தின் அறைகளை விசாரிக்க வைக்கப்பட்ட ஆசாரியன் யார்?
15. வேலைக்கு வேண்டிய மரங்களை கொடுக்கும்படி ராஜா கடிதம் கொடுத்த வனத்துக் காவலன் யார்?
16. வானத்து நட்சத்திரங்களைப்போல கர்த்தர் யாரை பெருகப்பண்ணினார்?
17. சன்பல்லாத்தும், கேஷேமும் நெகேமியாவை பேச அழைத்த கிராமம் இருந்த பள்ளத்தாக்கு எது?
18. நெகேமியாவும் அவன் சகோதரரும் அதிபதிகள் வாங்குகிறபடியே எத்தனை வருஷம் வாங்கிச் சாப்பிடவில்லை?
19. ஜெபத்திலே ஸ்தோத்திரப்பாட்டைத் துவங்குகிற தலைவன் யார்?
20. மோசேயின் நியாயப்பிரமாண புஸ்தகத்தைக் கொண்டுவந்த வேதபாரகன் யார்?

## பெப்ரவரி 2020 மாத திருமறை அறிவு போட்டிக்கான விடைகள்

1. செரெபியா – எஸ்றா 8:18
2. சர்வாங்க தகனபலி – எஸ்றா 3:6
3. செஸ்பாத்சார் - எஸ்றா 5:16
4. சேஸ்பாத்சாரிடத்தில் - எஸ்றா 1:8
5. ஒரு சுருள் - எஸ்றா 6:2
6. எஸ்றா – எஸ்றா 7:6
7. 98 – எஸ்றா 2:16
8. சீரிய எழுத்தில் - எஸ்றா 4:7
9. கர்த்தரைத் துதிக்கும்படிக்கும், தாளங்களைக் கொட்டுகிறதற்கும் - எஸ்றா 3:10
10. பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் - எஸ்றா 5:12
11. எஸ்றா – எஸ்றா 9:5
12. முதலாம் மாதம் பதினாலாந்தேதி – எஸ்றா 6:9
13. கசிப்பியா – எஸ்றா 8:17
14. திர்ஷாதா – எஸ்றா 2:63
15. ஆதார் - எஸ்றா 6:15
16. பெர்சியாவின் ராஜாவாகிய தரியு – எஸ்றா 4:24
17. எலியாசிபின் குமாரானாகிய யோகனானின் அறைக்குள் - எஸ்றா 10:6
18. மெரேமோத் - எஸ்றா 8:33
19. தேவனுடைய – எஸ்றா 5:5
20. செருபாபேல் - எஸ்றா 3:2, 3:8, 5:2)

## பெப்ரவரி மாத திருமறை போட்டிக்கு சரியான விடை எழுதியவர்கள்

| | | |
|---|---|---|
| Mr. Alex Baskar | Mr. Jaslin Sundara Kumar | Mr. Lenin Raj |
| Mr. Anand | Mr. Jean C. R. Shibin | Mr. Prince J. P. |
| Mr. Anshio Shajin | Mr. Jino John | Mr. Rajan V. N. |
| Mr. Austin Daniel Raj | Mr. Johan Pratheep | Mr. Ramesh R. |
| Mr. Bejo Nelson | Mr. Justus Martin | Mr. Selvamoni |
| Mr. Daniel Raj P. | Mr. Kanagavel | Mr. Srinivas |

## பெண்கள் பகுதி – திருமறை அறிவுப்போட்டி ~ 83

### மார்ச் 2020 மாத கேள்விகள்

### (சங்கீதம் 94 - 103 வரை)

1. கர்த்தர் எதன் மத்தியில் வீற்றிருக்கிறார்?
2. புல்லைப்போல் உலர்ந்தது எது?
3. யார் வாயாடி பெருமைப்பாராட்டுவார்கள்?
4. தலைமுறை தலைமுறைக்கும் உள்ளது எது?
5. கர்த்தருக்கு முன்செல்வது எது?
6. கர்த்தருடைய கையில் இருப்பது எது?
7. கர்த்தருடைய கிருபை யார்மேல் உள்ளது?
8. கர்த்தரின் சமூகத்தில் இருக்கிறது எது?
9. யார் அதிகாலமே சங்கரிக்கப்படுவார்கள்?
10. தேவனுடைய இரட்சிப்பைக் கண்டது எது?
11. பாழான இடங்களில் தங்குவது எது?
12. கர்த்தருக்கு முன்பாக கெம்பீரிப்பது எது?
13. நீதியில் பிரியப்படுகிறது எது?
14. கர்த்தருக்கு முன்பாக கைகொட்டி பாடுவது எது?
15. மவுனத்தில் வாசம்பண்ணுவது எது?
16. சர்வத்தையும் ஆளுகிறது எது?
17. எதை கடினப்படுத்த கூடாது?
18. யாருடைய விண்ணப்பத்தை அங்கீகரிப்பார்?
19. யாருக்காக வெளிச்சம் விதைக்கப்பட்டிருக்கிறது?
20. எது என்னைவிட்டு அகலவேண்டும்?

### பெப்ரவரி 2020 மாத திருமறை அறிவு போட்டிக்கான விடைகள்

1. கொம்பு – சங். 89:17
2. சங்காரம் - சங். 91:6
3. பரிசுத்தமானது – சங். 93:5
4. அபிஷேகம் - சங். 92:10
5. பெருமையை – சங். 89:9

6. சிசெரா, யாபீன் - சங். 83:10

7. அதம் - சங். 88:16

8. எண்ணும் - சங். 90:12

9. துன்மார்க்கர் - சங். 92:7

10. வீடு – சங். 84:3

11. 1000 – சங். 90:4

12. பூமியிலிருந்து – சங். 85:11

13. மிருக குணமுள்ள மனுஷன் - சங். 92:6

14. தன் இருதயத்தை – சங். 86:11

15. 80 – சங். 90:10

16. பூச்சக்கரம் - சங். 93:1

17. சீயோனின் - சங். 87:2

18. கர்த்தருடைய ஆலயத்திலே நாட்டப்பட்டவர்கள் - சங். 92:13

19. 10,000 – சங். 91:7

20. ராகாபை – சங். 89:10

## பெப்ரவரி மாத திருமறை போட்டிக்கு சரியான விடை எழுதியவர்கள்

| | | |
|---|---|---|
| Mrs. Anbu Selvi Daniel Raj | Mrs. Manju Martin | Mrs. Shiney Johan |
| Mrs. Ancy Daniel | Mrs. Mary Praveena Gobinath | Mrs. Thamari Johnson |
| Mrs. Aspin Bejo | Mrs. Nisha Rajan | Mrs. Vanitha Rani Prince |
| Mrs. Boopathi Baskar | Mrs. Percy Jean | Mrs. Ashika Joel |
| Mrs. Golden Irene Sheeja Robin | Mrs. Priyadarsini Kanagavel | Mrs. Synthia Srinivas. |
| Mrs. Jancy Deepa Victor | Mrs. Pushpa Rani Moorthy | Mrs. Evangelin Yesudhas |
| Mrs. Jenshy N. Lenin | Mrs. Regin Justa Vinolin | Mrs. Vency Deepa Kannan |
| Mrs. Jeya Rani Victor | Mrs. Sapthekha Jerry Sathya | Mrs. Shabila Gnanadhas |
| Mrs. Josephin Anto Kingston | Mrs. Sarah Rajasingh | Mrs. Sujatha Shalini Jino |
| Mrs. Juslin Jaslin | Mrs. Sathya Priya Ramesh | Mrs. Virgin Jegatha Jino |
| Mrs. Leela Gladson | | |

# அனுதின மன்னா – மார்ச் 2020

ஒவ்வொரு நாளும் வாசிக்கிறதற்காக ஒரு திருமறைப்பகுதி ஒவ்வொரு நாளுக்கும் தரப்பட்டுள்ளது, வாசித்து தியானித்து பயனடையுங்கள். குடும்ப ஜெபத்திற்கு இந்த பகுதியை பயன்படுத்துங்கள்.

| தேதி | நாள் | திருமறைப்பாடம் | அனுதின மன்னா | ஓராண்டில் திருமறை |
|---|---|---|---|---|
| மார்ச் 1 | ஞாயிறு | 1யோ. 1:5-10 | 1யோ. 1:7 | உபாகமம் 30-31 |
| மார்ச் 2 | திங்கள் | மத்தேயு 5:1-12 | மத்தேயு 5:8 | உபாகமம் 32-34 |
| மார்ச் 3 | செவ்வாய் | எபேசி. 4:25-32 | எபேசி. 4:29 | யோசுவா 1-4 |
| மார்ச் 4 | புதன் | 1பேதுரு 2:11-17 | 1பேதுரு 2:12 | யோசுவா 5-7 |
| மார்ச் 5 | வியாழன் | நீதி. 4:20-27 | நீதி. 4:25 | யோசுவா 8-10 |
| **மார்ச் 6** | **வெள்ளி** | **ஆதி. 2:4-15** | **ஆதி. 2:15** | **யோசுவா 11-14** |
| மார்ச் 7 | சனி | சங்கீதம் 24:1-10 | சங்கீதம் 24:4 | யோசுவா 15-18 |
| மார்ச் 8 | ஞாயிறு | மாற்கு 2:1-12 | மாற்கு 2:5 | யோசுவா 19-21 |
| மார்ச் 9 | திங்கள் | மத்தேயு 6:9-15 | மத்தேயு 6:14 | யோசுவா 22-24 |
| மார்ச் 10 | செவ்வாய் | யாக். 5:1-11 | யாக். 5:9 | நியா. 1-3 |
| மார்ச் 11 | புதன் | யாக். 3:5-14 | யாக். 3:14 | நியா. 4-5 |
| மார்ச் 12 | வியாழன் | ஆதி. 13:1-19 | ஆதி. 13:8 | நியா. 6-8 |
| **மார்ச் 13** | **வெள்ளி** | **ஆதி. 33:1-12** | **ஆதி. 33:10** | **நியா. 9-11** |
| மார்ச் 14 | சனி | 2பேதுரு 1:1-8 | 2பேதுரு 1:7 | நியா. 12-15 |
| மார்ச் 15 | ஞாயிறு | மத்தேயு 15:21-28 | மத்தேயு 15:28 | நியா. 16-18 |
| மார்ச் 16 | திங்கள் | ரோமர் 5:17-21 | ரோமர் 5:19 | நியா. 19-21 |
| மார்ச் 17 | செவ்வாய் | பிலி. 4:8-14 | பிலி. 4:13 | ரூத் 1-4 |
| மார்ச் 18 | புதன் | ரோமர் 8:14-17 | ரோமர் 8:17 | 1சாமு. 1-3 |
| மார்ச் 19 | வியாழன் | கலா. 3:24-29 | கலா. 3:28 | 1சாமு. 4-7 |
| **மார்ச் 20** | **வெள்ளி** | **மத்தேயு 25:31-46** | **மத்தேயு 25:34** | **1சாமு. 8-10** |
| மார்ச் 21 | சனி | லூக்கா 23:39-43 | லூக்கா 23:43 | 1சாமு. 11-13 |
| மார்ச் 22 | ஞாயிறு | லூக்கா 13:10-17 | லூக்கா 13:16 | 1சாமு. 14-15 |
| மார்ச் 23 | திங்கள் | சங்கீதம் 51:1-12 | சங்கீதம் 51:2 | 1சாமு. 16-17 |
| மார்ச் 24 | செவ்வாய் | யோவான் 5:1-9 | யோவான் 5:8 | 1சாமு. 18-20 |
| மார்ச் 25 | புதன் | கலா. 5:1-6 | கலா. 5:1 | 1சாமு. 21-24 |
| மார்ச் 26 | வியாழன் | சங்கீதம் 85:1-13 | சங்கீதம் 85:1 | 1சாமு. 25:27 |
| **மார்ச் 27** | **வெள்ளி** | **லூக்கா 5:1-11** | **லூக்கா 5:8** | **1சாமு. 28-31** |
| மார்ச் 28 | சனி | யோவான் 8:28-36 | யோவான் 8:36 | 2சாமு. 1-3 |

| தேதி | நாள் | திருமறைப்பாடம் | அனுதின மன்னா | ஓராண்டில் திருமறை |
|---|---|---|---|---|
| மார்ச் 29 | ஞாயிறு | எபேசி. 2:1-10 | எபேசி. 2:5 | 2சாமு. 4-7 |
| மார்ச் 30 | திங்கள் | யோவான் 3:12-21 | யோ. 3:14-15 | 2சாமு. 8:11 |
| மார்ச் 31 | செவ்வாய் | லூக்கா 19:1-10 | லூக்கா 19:10 | 2சாமு. 12-13 |
| ஏப்ரல் 1 | புதன் | 1கொரி. 1:18-31 | 1கொரி. 1:18 | 2சாமு. 14-15 |
| ஏப்ரல் 2 | வியாழன் | எபேசி. 2:1-18 | எபேசி. 2:7 | 2சாமு. 16-18 |
| ஏப்ரல் 3 | **வெள்ளி** | கொலோ. 1:24-29 | கொலோ. 1:27 | 2சாமு. 19:20 |

## இந்த மாத முக்கிய நிகழ்ச்சிகள்

05-03-2020 வியாழன் – இரவு ஜெபக்கூடுகை
இடம் : C.S.I. மலையாளம் ஹால்/நேரம்: இரவு 9:00–11:00

06-03-2020 வெள்ளி – பரிசுத்த நற்கருணை ஆராதனை
இடம் : C.S.I. மலையாளம் ஹால்/நேரம்: மாலை 4:45–6:45

13-03-2020 வெள்ளிஆராதனை
இடம் : C.S.I. மலையாளம் ஹால்/நேரம்: மாலை 4:45–6:45

14-03-2020 சனி – உபவாச ஜெபக் கூட்டம்
இடம் : மார்த்தோமா ஹால் / காலை 10:30–1:00

19-03-2020 வியாழன் - பெண்கள் ஐக்கிய சங்க கூடுகை
இடம் : C.S.I. மலையாளம் ஹால்/நேரம்: இரவு 9:00–11:00

19-03-2020 வியாழன் - ஆண்கள் ஐக்கிய சங்க கூடுகை
இடம் : மார்த்தோமா ஹால் / நேரம்: இரவு 9:00–11:00

20-03-2020 வெள்ளி – பரிசுத்த நற்கருணை ஆராதனை
இடம் : C.S.I. மலையாளம் ஹால்/நேரம்: மாலை 4:45–6:45

27-03-2020 வெள்ளிஆராதனை
இடம் : C.S.I. மலையாளம் ஹால்/நேரம்: மாலை 4:45–6:45

01-04-2020 புதன் - அருணோதய ஆராதனை
இடம் : மார்த்தோமா ஹால்/ அதிகாலை 5:00–6:00

02-04-2020 வியாழன் – இரவு ஜெபக்கூடுகை
இடம் : C.S.I. மலையாளம் ஹால்/நேரம்: இரவு 9:00–11:00

03-04-2020 வெள்ளி- பரிசுத்த நற்கருணை ஆராதனை
இடம் : C.S.I. மலையாளம் ஹால்/நேரம்: மாலை 4:45–6:45

# ஆராதனை ஒழுங்குகள்

| | |
|---|---|
| பிரதி மாதம் முதல் தேதி | அருணோதய ஆராதனை<br>நேரம் : அதிகாலை 5:00 – 6:00<br>இடம் : மார்த்தோமா ஹால் |
| முதல் மற்றும் மூன்றாம் வெள்ளி | பரிசுத்த நற்கருணை ஆராதனை<br>நேரம் : மாலை 4:45 – 6:45<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால் |
| இரண்டு, நான்கு மற்றும் ஐந்தாம் வெள்ளி | மாலை ஆராதனை<br>நேரம் : மாலை 4:45 – 6:45<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால் |
| முதல் வியாழன் | இரவு ஜெபக் கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால் |
| இரண்டாம் சனி | உபவாச ஜெபக் கூடுகை<br>நேரம் : காலை 10:30 – 1:00 |
| மூன்றாம் வியாழன் | பெண்கள் ஐக்கிய சங்க கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால் |
| மூன்றாம் வியாழன் | ஆண்கள் ஐக்கிய சங்க கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : மார்த்தோமா ஹால் |

திருமறை பள்ளி வகுப்புகள் - எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 4:45 முதல் 5:45 மணி வரை நடைபெறும்.

பாடகர் குழு பயிற்சி - எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 7:00 முதல் 8:00 மணி வரை நடைபெறும்


**Contact: Rev. Dr. N. Jesin**

**GSM : 9693 3489**
**Land Line : 2470 5784**
**E-mail : csitco@gmail.com**
**www.csitamilchurchoman.org**



**(For Private Circulation Only)**